25.2.20154

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரக்கன்று நடும் பணி தொடக்கம்

வீரபாண்டி கௌமாரியம்மன் கோயில் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை வனத் துறை சார்பில், அரசு திட்டத்தின் கீழ் மரக் கன்றுகள் நடவு செய்யும் பணியை ஆட்சியர் ந.வெங்கடாசலம் தொடங்கி வைத்தார். தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மரக் கன்றுகள் நடும் அ திட்டத்தின் கீழ் 2015-ஆம் ஆண்டு மாவட்டத்தில் 2 லட்சத்து 9,375 மரக் கன்றுகள் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, வீரபாண்டி கௌமாரியம்மன் கோயில் வளாகத்தில் மரம் நடும் பணியை ஆட்சியர் தொடங்கி வைத்தார். மாவட்ட வன அலுவலர் மாரிமுத்து, மேகமலை வன உயிரின காப்பாளர் சொர்ணப்பன், முன்னாள் எம்.எல்.ஏ., ஆர்.டி.கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அரியலூரில் பிப். 27-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளது: வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. இதில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சொட்டுநீர் பாசனத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி



கரும்பில் இருந்து சர்க்கரை மட்டும் தயாரித்த காலம் கடந்து விட்டது. தற்போது கரும்புச்சாறு கழிவில் மொலாசஸ், சாக்லெட் மற்றும் கரும்பு கையில் இருந்து மின்சாரம், இயற்கை உரம், காகிதம் என கரும்பின் அனைத்து பாகங்களும் பயன்படுகிறது. சமுதாயத்தின் பெரிய பொருளாதார ரீதியாக கரும்பு பயிர் உள்ளது. "கரும்பு சாகுபடியில் இடுபொருள் மற்றும் நீர்பாசனம் போன்றவற்றை குறைத்து மகசூல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை பெருக்கிட "நீடித்த நவீன கரும்பு சாகுபடி' என்ற புதிய தொழில் நுட்பத்தினை தேசிய வேளாண்மைத்துறை அறிமுகம் செய்துள்ளது. இதை "நபார்டு' வங்கி நிதி உதவியில் சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து தமிழ்நாடு வேளாண் பல்கலையின் "நீர் நுட்ப மையம்' மூலம் செயல்படுத்தி வருகிறது. இம்முறையில் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி அருகே ஏமப்பேர் கிராமத்தில் விவசாயி முத்துக்கவுண்டர் வயலில் "கிரேஸி கரும்பு நாற்று' பண்ணையில் கரும்பு நாற்றுகள் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலாளர் கிரேஸி விமலா பாய் கூறியதாவது: நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையானது கரும்பு சாகுபடியில் ஒரு புதிய அணுகுமுறை மற்றும் நீர் சேமிப்பு வழிகளில் ஒரு புதிய முயற்சி. இந்த முறையில் விளைச்சலை அதிகரிப்பதோடு நீர்நிலை ஆதாரங்கள் முற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும் உறுதுணையாய் இத்தொழில் நுட்பம் இருக்கிறது. நீடித்த நவீன கரும்பு சாகுபடியானது குறைந்த அளவு தண்ணீரை உபயோகிப்பது சரியான அளவு ஊட்டச்சத்து மற்றும் பயிர் பராமரிப்பின்

மூலம் அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் ஒரு சாகுபடி முறை. சாதாரணமாக ஒரு ஏக்கரில் கரும்பு நடவு செய்ய வேண்டுமானால் நான்கு டன்கள் கரும்பு தேவைப்படும். இன்றைய கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2,250. இதன்படி நான்கு டன்களுக்கு ரூ.10,200 தேவை. ஆனால் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் கரும்பு நாற்றுகள் நடும்பொழுது ஒரு ஏக்கருக்கு சுமார் 5000 நாற்றுகள் போதுமானது. நாற்று ஒன்றின் விலை ரூ.1.40. இதன்படி 5,000 நாற்றுகளுக்கு ரூ.7,000 போதும். மேலும் 30 நாட்கள் வயதுள்ள நாற்றுகளாக நடுகின்றபடியால் ஒரு மாதத்திற்குண்டான பயிர் பராமரிப்பு செலவு குறைவதோடு கரும்பு வெட்டு மாதமும் ஒரு மாத்திற்கு முன்னரே வருகிறது. கரும்பினை நேரடியாக அப்படியே வயலில் நடும்பொழுது நடும் அனைத்து பருக்களும் அப்படியே முளைக்கும் என்ற உத்திரவாதம் இல்லை. ஆனால் நாற்றுகளாக நடும் பொழுது அனைத்து நாற்றுகளும் முளைப்புத்திறன் கொண்டதாக உள்ளது. கரும்பு கரணையாக நடுகின்றபொழுது உண்டாகும் கூடுதல் பணியாளர்களை விட நாற்றுகளாக நடும் பொழுது குறைவான பணியாளர்களே போதும். ஒரு ஏக்கருக்குண்டான 5,000 நாற்றுகளை ஆறு நபர்கள் நான்கு மணி நேரத்தில் நடவு செய்து விடலாம். மேலும் பருக்கள் அனைத்தும் முறைப்படி விதை நேர்த்தி செய்து நாற்றுகளாக்கப்படுவதால் கரும்பு பயிரில் நோய் தாக்குதலானது பெருமளவு கட்டுப்படுத்தப்படுகிறது. நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் கரும்பு நாற்றுகளாக நட்ட வயலில் ஒரு ஏக்கருக்கு கரும்பு மகசூலானது சுமார் 70 டன்கள் வரை கிடைக்கிறது. இதனால் விவசாயிக்கு அதிக லாபம் கிடைப்பதோடு சர்க்கரை ஆலைகளுக்கும் சர்க்கரை கட்டுமானம் அதிகம் கிடைத்து விவசாயிகளுக்கு கரும்புக்கு அதிக விலை கொடுக்க வழிவகை செய்கிறது. நீடித்த நவீன கரும்பு சாகுபடி மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், நாற்றுக்கும் தமிழக அரசின் மானியம் உண்டு. முடிந்த நடவு பருவத்தில் 100 சதவீத மானியத்தில் ஆறு லட்சத்து 25 ஆயிரம் நாற்றுகள் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் அறிவியல் மையத்தின் நீர்நுட்ப மையம் மூலம்

விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம் என்றார். தொடர்புக்கு 88705 66337 ல் அழுத்தலாம். **-கா.சுப்பிரமணியன், மதுரை.**

## ***சின்ன சின்ன செய்திகள்***



**தீவனப்பயிர்களில் புதிய வெளியீடுகள்**: கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கோ (பிஎன்)5 - ஏழு அறுவடைகளில் அதிக பசுந்தீவன விளைச்சலாக எக்டருக்கு 360 டன் கொடுக்கிறது. குளிரை தாங்கி வளர்வதாலும் ஆண்டு முழுவதும் சீரான விளைச்சல் தரும். அதிக உலர்எடை தீவனம் 79.2 டன் / எக்டர் / ஆண்டு தரவல்லது. விரைவில் தழைத்து வளரக் கூடியது. முதல் அறுவடை 75-80 நாட்களிலும் அடுத்தடுத்த அறுவடை 40 நாட்கள் இடைவெளியில் செய்யலாம். எல்லா மண் வகைக்கும் ஏற்றது. நிலத்தைப் பண்படுத்தி 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து அடியுரமாக எக்டருக்கு தொழு உரம் 25 டன், தழை, மணி மற்றும் சாம்பல் சத்து முறையே எக்டருக்கு 75 கிலோ, 50 கிலோ மற்றும் 40 கிலோ இட்டு எக்டருக்கு 30,000 தண்டு கரணைகளை 60 X 60 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நட்ட 3வது நாள் உயிர் நீர் பின்பு 10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட வேண்டும். **தீவனச்சோளம் கோ.31** : இது 2014ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதிக பசுந்தீவன விளைச்சல் 192 டன்கள் / எக்டர் தரவல்லது. விரைவாக தழைக்கும் திறனால் ஆண்டுக்கு ஆறு அறுவடைகள் செய்யலாம். கறவை மாடுகள், ஆடுகள் விரும்பி உண்ணக்கூடிய இரகம் இது. **குதிரை மசால் கோ.2** : இந்த இரகம் கோ.1ஐக் காட்டிலும் சீரிய பண்புகளைக் கொண்டது. பசுந்தீவன விளைச்சல் 130 டன்கள். புரதசத்து 23.5 சதம். இதன் அடர்த்தியான கொத்துக்கொத்தாக பூக்கும் திறன் கூடுதல் விதை உற்பத்திக்கு (240 கிலோ / எக்டர்) வழி வகுத்துள்ளது. மேலும் புரட்சி ஏற்படுத்திய பல தீவனப்பயிர்கள் பற்றிய விபரங்களுக்கு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : பேராசிரியர் மற்றும் தலைவர், தீவனப்பயிர் துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. போன் : 0422-6611228.

**சீமைத்தினை (quinoa)** ஒப்பந்த சாகுபடி: ஈக்வேடார், பெரு, பொலிவியா மற்றும் அர்ஜென்டினா ஆசிய நாடுகளில் உள்ள ஆண்டில் மலைப்பகுதிகளில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் விளைவித்தனர். சீமைத்தினை "இன்காஸ்' என்ற இனமக்களின் அடிப்படை ஆதாரமாகவும், புனித உணவாகவும் கடவுளின் பரிசாகவும் கருதப்பட்டது. தமிழ்நாட்டில் "சீமைத்தினை' செம்மண் பூமியில் நன்றாக வளரும். இவ்வகை தினைக்கு நீர் அவசியம். ஆனால் அதிக நீர் தேவையில்லை. சொட்டு நீர்ப்பாசனம் மிகவும் ஏற்றது.

**நாற்று உற்பத்தி :** "டிரே' எனப்படும் ஓரம் மடிக்கப்பட்டுள்ள தட்டுகளில் ஈரச் செம்மண்ணுடன் சாதாரண ஈரமண்களையும் நிரப்பி அதன் மீது விதைகளைத் தூவி தண்ணீர் விட வேண்டும். "டிரே'க்கள் திறந்தவெளி அல்லது வலையால் மூடப்பட்ட ஷெட்களில் வளர்க்கப்பட வேண்டும். நாற்றுகள் வளர்ந்த பின் அவற்றை எடுத்து ஒவ்வொரு நாற்றுக்கும் 2 X 2 அடி தூர இடைவெளி விட்டு நட வேண்டும். மழைக்காலத்திற்கு முன்பே தினை சாகுபடி செய்ய வேண்டும். பிப்ரவரி மாதமே சிறந்தது. சொட்டுநீர்ப்பாசனம் மூலம் நாள் ஒன்றுக்கு 2-3 மணி நேர இடைவெளியில் தண்ணீர் அளித்தால் போதும்.

**ஒப்பந்தமுறை சாகுபடி** : பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான மாட்டுச்சாணம், மண்புழு உரம், வேப்பெண்ணெய், ஜீவாமிர்த கரைசல் மற்றும் பயோ இடுபொருட்கள், பயோ பூச்சிக்கொல்லிகள் தொழில்நுட்ப உதவிகள், கருவிகள் போன்றவைகளை "ஆஷ்ட்ரால் பயோடெக் (பி) லிட் நிறுவனமேஒப்பந்தமுறையில்வழங்குகிறது.

**அறுவடை** : 110 நாட்களில் இலைகள் மஞ்சளாக மாறி மண்ணில் விழுந்து விடும். 120 நாட்களில் அறுவடை செய்து விடலாம்.

கதிர்களிலிருந்து தானியத்தைப் பிரித்தெடுத்து காயவைத்து சாக்கு பைகளில் அடைத்து மூடைகளாக சேமிக்கலாம். இதன் சாகுபடி செலவு 1 ஏக்கருக்கு ரூ.36 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை ஆகும். ஏக்கருக்கு 10 முதல் 15 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும். ஆஷ்ட்ரால் பயோடெக் நிறுவனம் 1 குவிண்டாலுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை தருகிறது. சீமைத்தினையை சாகுபடி செய்ததில் 3 மாதத்தில் 1 ஏக்கருக்கு 1 லட்சத்திலிருந்து 1.5 லட்சம் வரை சம்பாதிக்கலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள: "அழகர்குமார் - 91591 55285, ரமேஷ்குமார் -88073 58790, ராஜ்குமார் - 88833 33967, சத்யமூர்த்தி - 98425 93862. - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**<u>மாட்டேர் உழவு, நவீன கண்டுபிடிப்புகளை புறந்தள்ளி நிலைக்குது</u>**

தமிழர்களின் நுண்ணறிவு பல நூற்றாண்டுகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் கண்டு பிடிப்புகளுடன் இருப்பது தான்."சீரைத்தேடின் ஏரைத்தேடு" என அவ்வை கூறினார். மாட்டேர் எளிய தொழில்நுட்பம், பெரிய நீண்ட பயிற்சி தேவை இல்லை. மாடு, மரக்கலப்பை எளிதில் கிடைக்கும். எங்கும் கிடைக்கும். ஒரு ஏக்கர் உழ ரூ.300க்கு ஏர் கிடைக்கிறது. டிராக்டருக்கு ரூ.600 சால் விதை தேவையான ஆழத்தில் விழுந்து முறையாக மண்ணால் மூடப் பட்டு நல்ல முளைப்பு திறன் கூடுது. மண்புழு சாவதில்லை. பறவைகள் கண்ணுக்கு படாமல் தப்புகிறது. சம மற்ற பூமியையும் உழுக உழுக சமம் செய்யலாம். உரக்காரணிகள் தானே மக்கி விடுகிறது.குறைந்த மழை ஈரத்திலும் உடனே உழுது விதைத்திடலாம். மழை பெய்த உடனே டிராக்டர் கிடைப்பதில்லை. குடும்பத்தில் 2 பேருக்கு வேலை கிடைக்கிறது. புல், பயிர், மாட்டுக்கு காசு போடாத தீனி கிடைக்கிறது. உழவு மாடு போடும் சாணம், மூத்திரம் காட்டுக்கு உடனடி உரம். இன்னும் பல யுகங்களை சமாளித்து ஜெயித்திடும். தோப்புகளில் மரநாற்றுக்கு பழுதின்றி உழ முடியும்.- **சி.பழனிச்சாமி, திருப்பூர். 99944 94223**

## வெல்லம் தயாரிக்க செயல் முறை பயிற்சி

கூடலூர் : கூடலூர் விவசாயிகளுக்கு கரும்பிலிருந்து வெல்லம் தயாரிப்பது குறித்து செயல் முறை பயிற்சி அளிக்கப்பட்டது. கூடலூர் தோட்டக்கலை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில், விவசாயிகளுக்கு கரும்பு பயிரிட்டு, அதிலிருந்து வெல்லம் தயாரிப்பது குறித்து செயல்முறை விளக்க பயிற்சி முகாம், புத்தூர்வயலில் நடந்தது. இதில், 25 விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி தொழில் நுட்பு மேலாளர் சந்தியா நன்றி கூறினார்.

## சம்பா கோதுமையை பயிரிட்டால் பயன்; உழவர் தின விழாவில் அறிவுரை

குன்னூர் : குன்னூர் வெலிங்டன் அருகே இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், கோதுமை உழவர் தின விழா நடந்தது. விழாவில் ஆராய்ச்சி நிலைய முதுநிலை விஞ்ஞானி ஜெயப்பிரகாஷ் வரவேற்றார். முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் சிவசாமி தலைமை வகித்து பேசினார். தொடர்ந்து, வேளாண் விஞ்ஞானி விகாஷ் பேசியதாவது: வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மூலம், இந்த ஆண்டு சம்பா கோதுமையான "எச்.டபிள்யு -1098' என்ற சம்பா ரக கோதுமையும் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு மார்க்கெட்டில் அதிக வரவேற்பு உள்ளது. எந்த மருந்துகளும் தெளிக்காமல், குறைந்தளவு ஐந்து முறை தண்ணீர் பாய்ச்சி, களை எடுத்தால் மட்டும் போதும். நீலகிரியை பொறுத்தமட்டில், மைனஸ், 15 டிகிரி வரையிலான உறைபனியையும் தாக்கு பிடிக்கும் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு மார்க்கெட்டில் கிலோவிற்கு, 50 முதல் 60 ரூபாய் வரை கிடைக்கும் நிலையில், சம்பா கோதுமைக்கு, 120 ரூபாய் வரை கிடைக்கிறது. இயற்கை வேளாண் முறையில் இதனை விளைவித்த விவசாயிக்கு, தற்போது இயற்கை உணவு என்ற பெயரில் கிலோவிற்கு, 200 ரூபாய்

வரை கிடைக்கிறது. தமிழகத்தில் நீலகிரி, கொடைக்கானல், சேர்வராயன் மலை, ஏற்காடு, ஜவ்வாது மலை, கொல்லிமலை பகுதிகளில், வெயில் காலம் மற்றும் குளிர் காலத்தில் இந்த கோதுமையை பயிரிடலாம். தற்போது, தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், நீலகிரியில் சம்பா கோதுமை பயிரிடலாம். தமிழகத்தில் மலைப் பகுதிகளில், சம்பா கோதுமை சாகுபடி செய்து அதிக மகசூலுடன் கூடுதல் வருவாய் பெறலாம்.இவ்வாறு, விஞ்ஞானி விகாஷ் பேசினார். தொடர்ந்து, சம்பா கோதுமை சாகுபடி குறித்து தார்வார் ஆராய்ச்சி கூடம் ருத்ர நாயக், கோதுமையில் துருநோய் குருத்து முனைவர் நல்லதம்பி, உமாமகேஸ்வரி, உபாசி கே.வி.கே., தலைவர் ராமமூர்த்தி, மண்வள பாதுகாப்பு துறை முதுநிலை விஞ்ஞானி கண்ணன் ஆகியோர் பேசினர்.கருத்தரங்கில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்திருந்த விவசாயிகளுக்கு கோதுமை சாகுபடியும், முன்மாதிரி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. புதிய கோதுமை ரகங்களின் வளர்ச்சி மற்றும் அதனால் ஏற்படும் பயன்கள் குறித்து விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## <u>பாரம்பரிய முறையிலான தானிய சாகுபடி துவக்கம்</u>

ஊட்டி : கடநாடு கிராமத்தில், தானிய சாகுபடி, பாரம்பரிய முறையில் துவங்கியது. ஊட்டி அருகேயுள்ள கடநாடு சுற்றியுள்ள, 33 கிராமங்களைச் சேர்ந்த மக்கள், நேற்று கடநாடு கிராமத்தில் உள்ள கோட்ட தேவர் கோவிலில், தொட்டபா பண்டிகை கொண்டாடினர். விழா குறித்து ஊர் பெரியவர்கள் கூறுகையில், "ஆண்டு தோறும், முங்காரு சாகுபடிக்காக, கோதுமை, ராகி, கேழ்வரகு, சாமை உட்பட தானியங்களை சாகுபடி செய்வது வழக்கம். விளைச்சல் அமோகமாக இருக்க வேண்டும்; விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காக, சிறப்பு பிராத்தனையுடன் விழாவை நடத்துகிறோம். இந்த மகிழ்ச்சியை கொண்டாடும் வகையில், கிரிக்கெட் மட்டை போன்ற சாதனத்தில், பந்தை அடித்து, "அவுரு' என்ற

விளையாட்டை விளையாடி மகிழ்கிறோம்' என்றனர். விழாவில், சிறப்பு விருந்தினராக நாக்குபெட்டா தலைவர் முருகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>கரூரில் நெல் அறுவடை தீவிரம்; 1,000 மெ.டன் நெல் கொள்முதல்</u>**

கரூர் : கரூர் மாவட்டத்தில் நெல் அறுவடை பணி தீவிரமடைந்துள்ளது. தற்போது வரையிலும், 1,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப் பட்டு உள்ளதாக, வேளாண்துறை அலுவலர்கள் தெரிவித்தனர். கரூர் மாவட்டத்தில், மாயனூர் காவிரி கட்டளை பாசனங்கள் மூலம் லாலாப்பேட்டை, குளித்தலை சுற்று வட்டார பகுதிகளில், 20 ஆயிரம் ஏக்கர், அமராவதி பாசனங்களாக சுக்காழியூர், சின்னதாராபுரம் பகுதியில், 10 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக, நெல் அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது.தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில், ஜன., 24 ம் தேதி முதல், கரூர் மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் நங்கவரம், நச்சலூர், கிருஷ்ண ராயபுரம் வட்டத்தில் கோவக்குளம், பஞ்சப்பட்டி, கட்டளை, கரூர் வட்டத்தில் சுக்காலியூர், அரவக்குறிச்சி வட்டத்தில் சின்னதாராபுரம், மண்மங்கலம் வட்டத்தில் பள்ளபாளையம் ஆகிய இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையம் மூலம் நெல் கொள்முதல் செய்யப் படுகிறது.அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகை சேர்த்து நெல் கிரேடு "ஏ' ரகத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,470 ரூபாய், பொது ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு, 1,410 ரூபாய் வழங்கப்படுகின்றன.காவிரி மற்றும் அமராவதி ஆற்றில் போதிய அளவு தண்ணீர் திறக்கப்பட்டதால், நெல் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு மாதமாக கரூர் மாவட்டத்தில் நெல் அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கிடங்குக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். எட்டு கொள்முதல் நிலையத்தில், தற்போது, 1,000 மெட்ரிக் டன் வரை நெல் கொள்முதல்

செய்யப்பட்டுள்ளது என வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அதிகாரி ஒருவர் கூறுகையில்," கடந்தாண்டு மாவட்டத்தில், 1,500 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டு சில வாரங்களிலேயே, 1,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதலாகி விட்டது. அறுவடை பணி தொடர்ந்து நடைபெறு வதால், நடப்பாண்டு கூடுதலாக நெல் கொள்முதல் செய்ய வாய்ப்பு உள்ளது,' என்றார்.

## ரூ.1.07 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, ஒரு கோடியே, ஏழு லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,840 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,849க்கும், குறைந்த பட்சம், 6,419 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், 8,699க்கும், குறைந்த பட்சம், 5,771 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து, 031க்கும், குறைந்த பட்சம், 7,042 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று

மட்டும், ஒரே நாளில், ஒரு கோடியே, ஏழு லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனை

ஆற்காடு, : ஆற்காட்டில் அட்மா விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு அட்மா திட்ட தலைவர் சம்பத் தலைமை தாங்கினார். முன்னோடி விவசாயிகள் முனிரத்தினம், கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொழில்நுட்ப மேலாளர் பா.மொபேஷ்முருகன் வரவேற்றார். கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் சு.பேபிபர்வதம் கலந்து கொண்டு, 2 மாதங்களில் விவசாயிகள் அனைத்து செயல் இலக்கை முடிக்கவும், நெல் மற்றும் அனைத்து பயிர்களின் சாகுபடி பரப்பை பதிவு செய்யுமாறு அட்மா விவசாய உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார். கூட்டத்தில் வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. முடிவில் தொழில்நுட்ப மேலாளர் கார்த்திகாதேவி நன்றி கூறினார்.

## கோமாரி நோய் குறித்து இன்று பயிற்சி முகாம்

ஈரோடு, : கோமாரி நோய் குறித்து ஊராட்சி தலைவர்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இன்று (24ம் தேதி) பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. கால்நடைகளை தாக்கி வரும் கோமாரி நோயினை கட்டுப்படுத்த கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் வரும் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை தொடர்ச்சியாக 21 நாட்களுக்கு அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 3 லட்சத்து 70

ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. இதற்காக 117 குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. கடந்த 14ம் தேதியில் இருந்து மலைப்பகுதிகளான கடம்பூர், தாளவாடி, பர்கூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 45 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் கோமாரி நோய் தடுப்பூசி குறித்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்று (24ம் தேதி) ஊராட்சி தலைவர்கள், செயலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் 5 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பஞ்சாயத்துக்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், மீதமுள்ள 9 ஒன்றியங்களுக்கு கோபியிலும் நடைபெற உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்

திருப்பூர், : திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26ம் தேதி காலை 11 மணியளவில் கலெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும். எனவே, மாவட்ட விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## பூங்காவில் மலர் நாற்று நடவு பணி துவக்கம்

ஊட்டி, : வரும் கோடை சீசனை முன் னிட்டு மரவியல் பூங்காவில், பல்வேறு வண்ண மலர் நாற்று நடவு பணி துவங்கியுள்ளது. ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, மரவியல் பூங்கா, படகு இல்லம், தொட்டபெட்டா மலைச்சிகரம், பைக்காரா ஏரி உட்பட பல்வேறு சுற் றுலா தலங்களை பார்த்து மகிழ்கின்றனர். கோடை சீசன் சமயத்தில் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும்

வகையில் மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலை துறை, சுற்றுலாத்துறை மற்றும் தனியார் அமைப்புகள் மூலம் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு கோடை சீசனுக்காக ஊட் டியில் உள்ள சுற்றுலா தலங்கள் தயாராகி வருகின் றன. இதன் ஒரு பகுதியாக தாவரவியல் பூங்காவில் 3 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ரோஜா பூங்காவில் ரோஜா செடிகள் அனைத் தும் கவாத்து செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், ஊட்டி மான் பூங்கா அருகே 1.58 எக்டர் பரப்பளவில் அமைந்துள்ள மரவி யல் பூங்காவும் சீசனுக்காக தயாராகி வருகிறது. பூங்கா வில் நீலகிரி மாவட்ட மரங்களான காட்டு நாவல் மரம், தவிட்டு பழம், விக்கிபழம் மற்றும் வெளி நாட்டு மரங் கள் என 80 வகையான மரங் கள் உள்ளன. மலர் செடிகள் நடவு பணிக்காக பூங்காவில் உள்ள பாத்திகளில் உரமிட்டு தயார் செய்யப்பட்டுள்ள நிலை யில், தற்போது நாற்று நடவு பணி துவங்கியுள்ளன. மேரிகோல்டு, பெட் டூனியா, டெய்சி உள்ளிட்ட பல்வேறு வண்ண மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு வருகின்றனர். பூங்கா முழுவதும் சுமார் 10 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளன. இப்பணிகளில் பூங்கா ஊழியர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

**திருச்செந்துறையில் இன்று வாழைத்தார் பொது ஏலம் டெல்டா விவசாயிகளுக்கும் வாய்ப்பு**

திருச்சி, : திருச்செந் துறை வணிக வளாகத்தில் இன்று வாழைத்தார் பொது ஏலம் நடை பெறு கிறது. திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வணிகத் துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறை யில் இயங்கி வரும் ஒருங் கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் இன்று (செவ் வாய்) நடைபெறு கிறது. இந்த ஏலத்தில் விவசாயிக ளுக்கு நல்ல விலை கிடைப் பதோடு எவ்வித கமிஷனு மின்றி உடனுக் குடன் பண மும் பட்டு வாடா செய்யப்ப டுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயி கள் காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்

டும்.திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண் டம், திருவெறும்பூர், லால் குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட் டாரங்களை சேர்ந்த விவ சாயிகள் மட்டுமின்றி, டெல்டா மாவட்ட விவ சாயிகளும் வாழைத்தார் களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிகவளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்று பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகி றது.

## வறட்சிக்கு தாக்கு பிடிக்கும் குதிரை வாரி சாகுபடியால் அதிக மகசூல், லாபம் பெறலாம்

அன்னவாசல், : வறட்சி யை தாங்கி வளரும் குதிரை வாரி சாகுபடியை மேற்கொண்டால் அதிக மகசூல், லாபம் பெறலாம் என்று அன்னவாசல் வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் பரிந்துரைத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தி குதிரைவாரி விதைத்தால் அதிக மகசூல் மற்றும் லாபம் பெறலாம். பொதுவாக குதிரைவாரி பயிரானது வறட்சி, மண் உவர்ப்பு ஆகியவற்றைத் தாங்கி வளரக்கூடிய மானாவாரி சிறுதானியப் பயிராகும்.நிலத்தை 2 முறை கலப்பையை கொண்டு உழுது சமப்படுத்தி விதைப்படுக்கையை தயார்படுத்த வேண்டும். கோ (கேவி) 2 என்ற ரக விதைகள் எக்டருக்கு 12.5 கிலோ வீதம் வரிசைக்கு வரிசை 22 செ.மீ இடைவெளியும், செடிக்குச் செடி 10 செ.மீ இடைவெளி யும் இருக்குமாறு விதைக்க வேண்டும். பொதுவாக குதிரை வாலிக்கு நீர்ப் பாசனம் தேவையில்லை. வறண்ட சூழ்நிலை நிலவினால் ஒரு முறை நீர்ப்பாசனம் பூங் கொத்து வரும் தருனத்தில் அளிக்க வேண்டும் ஒரு எக்டேர் நிலத்தில் 5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின் போது பரப்பி பின்னர் உழவுச் செய்ய வேண்டும். ஒரு எக்டேருக்கு பொதுப் பரிந்துரைப்படி 44:22 கிலோ தழைச்சத்து மற்றும் மணிச்சத்து முறையே யூரியா 96 கிலோவும் சூப்பர் பாஸ்பேட் 138 கிலோவும் இடவேண்டும்.வரிசை விதைப்பு செய்திருந்தால் 23 முறை இடை உழவுச் செய்யவும் ஒரு முறை

கையால் களை எடுத்தால் போதுமானது. இப்பயிரை எந்தவகை பூச்சி மற்றும் பூஞ்சாணமும் அதிகமாக தாக்குவதில்லை. கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். தானியங்களை பிரித்த பின் உள்ள தட்டையையும் நன்கு உலர்த்தி சேமித்து வைத்தால் ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு தீவனமாகக் கொடுக்கலாம். 95 நாள் வயதுடைய இந்த கோ (கேவி)2 ரகம் மூலம் எக்டேருக்கு 2650 கிலோ வரை அதிக மகசூல் பெறலாம். இந்த ரக விதைகள் அன்னவாசல் வேளாண் விரிவாக்க மையத்தில் போதுமான அளவுக்கு இருப்பில் உள்ளதால், இவற்றை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

## <u>பொன்னமராவதி அருகே மண் புழு உர உற்பத்தி விவசாயிகளுக்கு பயிற்சி</u>

பொன்னமராவதி, : பொன்னமராவதி அடுத்த முள்ளிப்பட்டி கிராமத்தில் மண் புழு உர உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. முள்ளிப்பட்டி ஊராட்சி தலைவர் ஆவியம்மாள் வேலுச்சாமி முன்னிலையில் நடைபெற்ற இதுதொடர்பான பயிற்சி முகாமுக்கு தலைமை வகித்து துவக்கிவைத்த பொன்னமராவதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன், இயற்கை வேளாண் தொழில்நுட்பம் மற்றும் மண் புழு உர உற்பத்தியின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார். மண் புழுக்களின் வகைகளை கண்டறிதல், மண் புழு உரம் தயாரிப்பதற்கான இடத்தேர்வு, மக்கிய கழிவுகளை மண் புழு உரமாக மாற்றும் வழிகள் மற்றும் பயிர்களுக்கு இடவேண்டிய மண் புழு உர அளவு ஆகியன குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் மண் புழு உர உற்பத்தி குறித்து முன்னோடி விவசாயி சின்னையா தோட்டத்தில் நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமல் பங்கேற்ற விவசாயிகள் 50 பேருக்கு ஊக்கத் தொகை மற்றும் வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன. முன்னதாக, வேளாண் துணை அலுவலர் மாணிக்கவாசகம் வரவேற்றார். முடிவில், வேளாண் உதவி அலுவலர் குமாரசாமி நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு திறன் மேம்படுத்தும் பயிற்சி

மதுரை, : இந்திய அர சின் நவரத்தின பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான 'கெயில் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் பெரு நிறுவன சமூக பங்களிப்பு திட்டத்தின் கீழ்' விவசாயிகளுக்கு வேளா ண் தொழில்நுட்ப திறனை மேம்படுத்திடும் உயரிய நோக்கத்தில் , 'விவசாயிகளுக்கான வேளாண்மை சார்ந்த திறன்களை மேம்படுத்தும் பயிற்சியினை' மதுரை சொக்கிகுளத்தில் அமைந்துள்ள வாப்ஸ் நிறுவனம் நேற்று முதல் தொடங்கியுள்ளது. இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில் நுட்பங்கள் பற்றி இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண்மைப் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடித் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு, களை மேலாண்மை, நீர் நிர்வாகம், விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், இயற்கை வேளாண்மை, மண்புழு உர உற்பத்தி, வீட்டுத் தோட்டம், மாடித்தோட்டம், காளான் உற்பத்தி, தேனீ வளர்த்தல், விவசாயிகளின் குழு அமைத்தலின் நன்மைகள் ஆகியவை பற்றி பயிற்சி அளிப்பதுடன் கள ஆய்வுக்கும் அழைத்துச் சென்று பயிற்சி அளிக்கப்படும். விவசாயிகளுக்கு 5 நாட்கள் அளிக்கப்படும் இப்பயிற்சியில் இறுதியில் மத்திய அரசின் சான்றிதழ் வழங்கப்படும். மேலும், இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு பயிற்சிக் கையேடு உள்ளிட்ட பயிற்சிக்கு தேவையான அனைத்தும் வழங்கப்படும். மேலும், பயிற்சி நாட்களில் இலவசமாக தேநீர் மற்றும் உணவும் அளிக்கப்படும். இப்பயிற்சியில் விவசாயிகள் மட்டுமே கலந்து கொள்ள முடியும், இப்பயிற்சியில் சேர்வதற்கு விருப்பமுடைய விவசாயிகள் உடனடியாக விண்ணப்பிக்கலாம். புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை சான்று, விவசாயிகளுக்கு ஏதேனும் சான்றின் நகலுடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் ஒருங்கிணைப்பாளர், கெயில் வாப்ஸ் விவசாயிகள் ஆலோசனை மற்றும் பயிற்சி மையம், எண்: 39,

பெசண்ட் ரோடு, சொக்கிகுளம், மதுரை-625 002 என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். மேலும், விபரங்கள் தேவைப்படுவோர் 9790902204, 9952137410 என்ற அலைபேசி எண்ணில் காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள் தொடர்பு கொள்ள லாம். விவசாயிகள் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி பயனடைய வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>பனி வரகு பயிரிட்டால் அதிக லாபம் கிடைக்கும்</u>

பழநி, : அதிக பணம் சம்பாதிக்க பனிவரகு பயிரிடலாமென வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பனிவரகு பயிரிட கோ (பிவி) 5 ஏற்ற ரகமாகும். ஆடி மற்றும் புரட்டாசி பட்டம் ஏற்ற பருவமாகும். நிலத்தை சட்டி கலப்பை கொண்டு ஆழமாக உழுவு செய்ய வேண்டும். வரிசை முறை விதைப்பாக இருந்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதையிட வேண்டும். தூவும் முறை விதைப்பாக இருந்தால் ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதையிட வேண்டும். 22.5 சென்டி மீட்டர் * 7.5 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு பயிரிட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையளவிற்கு 600 கிராம் அசோபாஸை அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். நிலத்தில் இடுவதாக இருந்தால் 1 ஹெக்டேருக்கு 2 கிலோ அசோபாஸை 25 கிலோ மணல் மற்றும் 25 கிலோ தொழுஉரம் கலந்து தூவ வேண்டும். 1 ஹெக்டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி பிறகு நிலத்தை உழ வேண்டும். தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்தை 44:22 கிலோ என்ற அளவில் கலந்து உரமிட வேண்டும். விதைத்த 18ம் நாள் களை பறிக்க வேண்டும். பின், 40ம் நாளில் மற்றொரு முறை களை எடுக்க வேண்டும். நன்கு காய்ந்து முற்றிய கதிர்களை அறுவடை செய்து, களத்தில் காயவைத்து அடித்து பின் தானியங்களை பிரித்து சுத்தம் செய்ய வேண்டும். இதுதொடர்பான

கூடுதல் தகவல்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரை யோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாமென வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>ஏப்ரல் வரை கம்பிற்கு கூடுதல் விலை கிடைக்க இருப்பு வைத்து விற்கலாம் வேளாண் துறை ஆலோசனை</u>

திண்டுக்கல், : கம்பிற்கு வரும் மாதங்களில் கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இவற்றை இருப்பு வைத்து விற்பனை செய்யலாம் என்று வேளாண்மை துறை ஆலோசனை வழங்கியுள்ளது. இந்தியாவில் கடந்த ஆண்டு 7.95 மில்லியன் ஹெக் டேர் பரப்பளவில் கம்பு சாகுபடி செய்யப்பட்டது. இதில் இருந்து 8.79 மில்லி யன் டன் உற்பத்தி பெறப்பட்டது. இதன் உற்பத்தி திறன் ஹெக்டேர்க்கு 1.19 டன்களாக உள்ளன. தமிழ்நாட்டில் கம்பு சாகுபடி பரவலாக மே-ஜூன், அக்டோபர்-நவம்பரில் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக அக்டோபர் -நவம்பர் மாதங்களில் பெய் யும் வடகிழக்கு பருவ மழை யின் அளவை பொறுத்து அதிகளவில் கம்பு பயிரிடப்படுகிறது. விளைந்த பிறகே விலையை அறிந்து கொள்ள முடிவதால் விவசாயிகள் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். எனவே இவற்றின் விலையை முன்னமே அறிந்து கொள்வதின் மூலம் சாகுபடி முடிவுகளை எடுத்துக் கொள்ள முடியும். இதனால் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் இதற்கான விபரங்களை வெளியிட்டுள்ளது. விலை முன்னறிவிப்பிற்காக விழுப்புரம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கடந்த 12 ஆண்டுகால விலை ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி வரும் மார்ச், ஏப்ரலில் கம்பு விலை குவிண்டாலுக்கு ரூ.1500 முதல் ரூ.1700வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே அறுவடையாகும் கம்பை இருப்பு வைத்து ஏப்ரல், மே மாதங்களில் விற்பனை செய்யலாம் என்று திண்டுக்கல் வேளாண் வணிக துணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## குறுகிய காலத்தில் அதிக லாபம் பயறுவகை?விதைப்பண்ணை அமைக்கலாம் வேளாண் அதிகாரி ஆலோசனை

சிவகங்கை, : விவசாயிகள் பயறுவகை பயிர் விதைப்பண்ணை அமைக்கலாம் என விதைச்சான்று உதவி இயக்குநர் இளங்கேவன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், சிவகங்கை மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை பணிகள் நடந்து வருகிறது. அறுவடை முடிந்ததும், நீர் ஆதாரம் உள்ள இடங்களில் குறுகிய காலத்தில் கூடுதல் லாபம் தரக்கூடிய பயறுவகை பயிர்களில் விதைப்பண்ணைகள் அமைக்கலாம். விதைப்பண்ணை அமைக்க தேவையான வல்லுநர் மற்றும் ஆதாரநிலை விதைகளை வட்டார வேளாண் விரிவாக்க அமைங்களில் பெற்றுக்கொள்ளலாம். உளுந்து பயரில் ஏடிடீ 5, வம்பன் 3, விபிஎன்(பிஜி) 4, விபிஎன்(பிஜி) 5 ஆகிய ரகங்களில் விதைப்பண்ணைகள் அமைக்கலாம். இதற்கு குறைந்த அளவு நீரே போதுமானது. சாகுபடி செலவும் குறைவாகும். 65 முதல் 70 நாட்களில் அறுவடை செய்திடலாம். ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ விதை போதுமானது. எட்டு கிலோ விதைக்கு ஒரு பாக்கெட் ரைசோபியம் (பயறு), ஒரு பாக்கெட் பாஸ்போபேக்டீரியா நுண்ணுயிர் பொட்டலத்தை 200 கிராம் ஆறிய வடிகஞ்சியுடன் கலந்து, நிழலில் உலரவைத்து பின்பு விதைக்க வேண்டும். விதைப்பண்ணையை வட்டார வேளாண் உதவி இயக்குநர் மூலம் சிவகங்கை விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். விதைத்த 30 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும். பூக்கும் தருணத்தில் 2 சதவீதம் டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும். இதனால் பூக்களின் எண்ணிக்கை அதிகமாகி 25 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும். விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பிரிமியம் மற்றும் உற்பத்தி மானியம் வழங்கப்படுகிறது. பயறு விதைப்பண்ணைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் என்றார்.

## குறைந்த வாடகையில் அறுவடை இயந்திரங்கள் வேளாண் விற்பனை குழுவினர் தகவல்

நெல்லை, : விவசாயிகள் பயன்பாட்டிற்காக குறைந்த வாடகையில் அறு வடை இயந்திரங்கள் தயா ராக இருப்பதாக நெல்லை மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தெரிவித்துள்ளது. நெல்லை மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழு செயலாளர் விஜயகுமார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: நெல்லை மாவட் டம் முழுவதும் தற்போது நெல் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. விவசாயிகள் பயன் அடை யும் வகையில் தற்போது ராமையன்பட்டி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நெல் அறுவடை இயந்திரங்கள் தயாராக உள்ளன. ஒரு மணி நேரத்திற்கு ரூ.600 என குறைந்த வாடகையில் அறுவடை இயந்திரங்கள் அளிக்கப்படும். இயந்திரங் கள் வேண்டுவோர் ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளரை அணுகி பெற்று கொள்ளலாம். இதேபோல் அம்பை, பாவூர்சத்திரம், ராமையன் பட்டி, தென்காசி, கடையநல்லூர். வள்ளியூர், சங்கரன்கோவில் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் விற்பனை கூடங்களில் குறைந்த வாட கையில் விவசாயிகள் தங்கள் நெல் மூடைகளை வைத்து கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்புகளை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருங்குளம் பகுதியில் இருமேனி நெல் விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சி மறு போகத்துக்கு தயாராகின்றனர்

செய்துங்கநல்லூர், : கருங்குளம் பகுதியில் இருமேனி நெல் விளைந்துள்ளதால் விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர். கருங்குளம் ஒன்றியத் தின் தெற்குப் பகுதி மணிமுத்தாறு 3வது ரீச் பாசனத் துக்கு உட்பட்டதாகும். இங்கு சேரக்குளம், இலுப்பைக்குளம், ராமானுஜம்புதூர், வெட்டிக்குளம், தீராத்திகுளம், சின்னார்குளம், அரசர்குளம், வல்லகுளம், புதுக்குளம், கிருஷ்ணன் குளம், சாத்தனேரி

குளம், சிரியந் தூர் குளம், தெற்கு காரசேரி குளம், கிளாக்குளம், குருக்கள் கோட்டைக் குளம் உள்பட பல குளங்கள் அமைந்துள்ளன. இப்பாசனப் பகுதியில் அம்பை 16 நாற்று கடந்த ஐப்பசி பயிரிடப்பட்டது. நல்ல மழையும், தொடர்ந்து வெயிலும் இருந்த காரணத்தால் இப் பகுதி விவசாயிகள் நல்ல விளைச்சலை கண்டுள்ளனர். தற்போது நெற்பயிர் விளைந்து கிடக்கிறது. சுமார் 5 ஆயிரம் ஏக் கரில் இரண்டு மேனி வரை நெல் விளைச்சல் உள்ளது. சாலையோர வயல்களில் நெல் விளையாத காரணத் தால் கடந்த வாரம் அறு வடை இயந்திரங்கள் உள்ளே நுழைய முடியாமல் இருந்தது. தற்போது அனைத்து வயல்வெளிகளும் விளைந்துவிட்டதால் விவசாயிகள் அறுவடையை தொடங்கியுள்ளார். அமோக விளைச்சலோடு போதுமான விலையும் உள்ளதால் விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து வல்லகுளத்தை சேர்ந்த விவசாயி சௌந்திரராஜன் கூறுகை யில், ஒரு மேனி நெல்மணி கிடைத்தாலே போட்ட முதல் வந்துவிடும் என்று நினைத்திருந்தோம். தற் போது 1 மேனியில் இருந்து இரண்டு மேனி வரை நெற்பயிர் விளைந்துள்ளது. அறுவடைக்கு ஏற்ற பருவ நிலை இருப்பதால் அறுவடை ஒரே வீச்சில் நடந்து வருகிறது. தற்போது குளங்களில் மணிமுத்தாறு தண்ணீர் இருப்பு, கிணற்று நீர் இருப்பை வைத்து மீண்டும் நடுவைக்கு ஆயத்த வேலை யில் ஈடுபட்டு வருகிறோம். கோடைக் காலமாக இருந்தாலும் கூட, கூடுதலாக ஒரு போகம் விளைய வைத்துவிடலாம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார். தாமிரபரணி பாசன பகுதியில் கூட கார் சாகுபடி, பிசான சாகுபடிக்கு பின்பு முன்கார்சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்கி தான் வருகிறார்கள். ஆனால் மணிமுத்தாறு அணையில் போதிய நீர் இருப்பு உள்ளதாலும், இந்த ஆண்டு 3வது, 4வது ரீச்களுக்கு நீர் முன்னுரிமை என்பதாலும் விவசாயிகள் தொடர்ந்து விவசாய பணியில் உள் ளனர். புதுக்குளம் பகுதியில் மறுபோகத்துக்காக விவசாயிகள்நாற்றுப்பாவியுள்ளனர்.

ஒருமேனிஎன்றால்...

ஒரு குறுணி என்பது 8 சென்ட் நிலம். ஒரு ஏக்கர் என்பது 12 குறுணி அதாவது 96 சென்ட் நிலமாகும். இந்த ஒரு ஏக்கர் நிலத்தில் விதைக்க சுமார் 30 கிலோ நெல் தேவை. ஒரு ஏக்கர் நிலத்தில் 12 கோட்டை அதாவது 1800 கிலோ எடையுள்ள நெல்மணி அறுவடையானால் ஒரு மேனி விளைச்சல் ஆகும். இதுவே, ஒரு ஏக்கர் நிலத்தில் விதைப்பதற்கு கிடைக்கவேண்டிய நியாயமான அறுவடையாகும். இதற்குமேல் கிடைத்தால் விவசாயிகளுக்கு லாபம் என்பது ஒரு கணக்கு.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் 27-ந் தேதி தொடங்குகிறது</u>**

நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் வருகிற 27-ந் தேதி தொடங்குகிறது. இது குறித்து நாகை கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ளஅறிக்கையில்கூறியிருப்பதாவது:-

விலையில்லாகால்நடைகள்

தமிழக அரசு வழங்கும் விலையில்லா கால்நடைகளை பெறும் பயனாளிகள் அதை முறையாக பராமரிக்க வேண்டும் என்று முதல்-அமைச்சர் வலியுறுத்தி உள்ளார். மேலும் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் 2011-12 மற்றும் 2012-13 ஆகிய ஆண்டுகளில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தியை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் வருகிற 27, 28-ந் தேதிகளில் கால்நடைகளுக்கான சிறப்புமருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

குடற்புழுநீக்கம்

இந்த முகாமில் இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கமும் செய்யப்பட உள்ளது. விலையில்லா கறவைப்பசுக்கள், ஆடுகள் பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் தங்கள் கால்நடைகளை இந்த முகாம்களுக்கு அழைத்து சென்று மருத்துவ சிகிச்சை அளிக்கலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கலெக்டர் பழனிசாமி கூறியுள்ளார்.

## <u>1,840 மஞ்சள் மூட்டைகள் ரூ.1 கோடியே 7 லட்சத்துக்கு ஏலம்</u>



நாமகிரிப்பேட்டையில், 1,840 மஞ்சள் மூட்டைகள் ரூ.1 கோடியே 7 லட்சத்துக்குஏலம்போனது.

மஞ்சள்ஏலம்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே உள்ள நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ். கிளை அலுவலக வளாகத்தில் ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர் மற்றும் விற்பனைச் சங்கம் சார்பில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை தோறும் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல இடங்களில் இருந்து நூற் றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மஞ்சளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல ஏலத்தில் சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள்கலந்துகொண்டனர்.

ரூ.1 கோடியே 7 லட்சத்துக்கு விற்பனை இந்த ஏலத்தில் விரலி ரகம் 1,015 மூட்டைகளும், உருண்டை ரகம் 815 மூட்டைகளும், பனங்காளி ரகம் 10 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம்

குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.6,419-க்கும் அதிகபட்சமாக ரூ.9,849-க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.5,771-க்கும் அதிகபட்சமாக ரூ.8,699-க்கும், பனங்காளி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.7,042-க்கும் அதிகபட்சமாக ரூ.16,039-க்கும் ஏலம் விடப்பட்டது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 2,205 மஞ்சள் மூட்டைகள் ரூ.1¼ கோடிக்கு ஏலம் போனது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 1,840 மஞ்சள் மூட்டைகள் ரூ.1 கோடியே 7 லட்சத்துக்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை விட மஞ்சள் மூட்டைகள் வரத்தும் குறைந்து, ஏலமும் குறைந்த தொகைக்கு போனதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## இலுப்பூர் அருகே பூத்துக்குலுங்கும் கேந்தி பூக்கள்



இலுப்பூர் அருகே, பூத்துக்குலுங்கும் கேந்தி பூக்களால் அப்பகுதி விவசாயிகள்மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

கேந்திமலர்கள்

இலுப்பூர் அருகே உள்ள மகுதுப்பட்டியில் வயல் பகுதியில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கேந்தி பூக்களை பயிர் செய்துள்ளனர். இத்தகைய மலர்கள் கோவில்களுக்கும், பல்வேறு விசேஷங்களுக்கும் மாலையாக கட்டி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் விசேஷ காலங்களில் இந்த பூக்களால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். இந்த கேந்தி பூக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது வெயிலின் தாக்கத்தால் மகுதுப்பட்டி மற்றும் சுற்று வட்டாரக்கிராமங்களில் கடுமையான வறட்சி நிலவுகிறது.

ரசிக்கும்பயணிகள்

இத்தகைய வறட்சியிலும் மகுதுப்பட்டியில் பயிரிடப்பட்டு உள்ள கேந்தி பூக்கள் பூத்து குலுங்குகிறது. இந்த பூக்கள் பயிர்செய்யப்பட்டுள்ள

வயல்கள் சாலைக்கு அருகாமையில் உள்ளதால் அந்த வழியாக வாகனங்களில் செல்வோரும் பஸ்பயணிகளும் பூத்துக்குலுங்கும் கேந்தி பூக்களை ரசித்த படி செல்கின்றனர்.